**செய்தி வெளியீடு எண் : 867** **நாள்: 30.05.2022**

**செய்தி வெளியீடு**

**தஞ்சாவூர் மாவட்டம், பீமனோடை வடிகாலில் 4.50 கி.மீ. நீளத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (30.5.2022) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, வடபாதி கொக்கேரி கிராமத்தில் பீமனோடை வடிகால் நெடுகையில் 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மேட்டூர் அணை கட்டப்பட்ட நாள் முதல் குறுவை சாகுபடிக்கு வழக்கமான தண்ணீர் திறக்கும் நாளான ஜூன் 12 ஆம் தேதிக்கு முன்னதாக முதல்முறையாக மே 24-ல் குறுவை பாசனத்திற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தண்ணீர் திறந்து வைத்தார்கள். நாடு சுதந்திரம் பெற்றப் பின் மே மாதத்தில் தண்ணீர் திறந்து விடப்படுவது இதுவே முதல் முறையாகும்.

மேட்டூர் அணையிலிருந்து முன்னதாக தண்ணீர் திறந்துவிடப்படுவதால் டெல்டா பாசனப்பகுதிகளில் வழக்கத்தைவிட குறுவை சாகுபடி பரப்பும், உற்பத்தியும் அதிகரிப்பதோடு, எதிர்வரும் சம்பா சாகுபடி பணிகளை முன்னதாக தொடங்கி செயல்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

இந்த ஆண்டு 10 டெல்டா மாவட்டங்களில் ரூ.80 கோடி மதிப்பீட்டில் 4964 கி.மீ. தூரத்திற்கு தூர்வார்வதற்கான பணிகளை விவசாய குழுக்களோடு இணைந்து வெளிப்படைத் தன்மையோடு பருவமழைக்கு முன்னதாகவே செய்து முடித்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.21 கோடி மதிப்பீட்டில் 170 தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுக்கா, வடபாதி கொக்கேரி கிராமத்தில் பீமனோடை வடிகால் நெடுகையில் 0 கி.மீ. முதல் 4.50 கி.மீ. வரை மேற்கொள்ளப்பட்டுள்ள தூர்வாரும் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பீமனோடை வடிகாலானது வடவாறு வாய்க்காலின் வலதுகரையில் 24.930 கி.மீ. பிரிந்து 15.00 வரை செல்கிறது. இது சுமார் 315 ஏக்கர் நிலங்களுக்கு பாசனம் அளிக்கிறது. பீமனோடை வடிகாலானது திட்டுக்களும், காட்டாமணக்கு கோரை போன்ற செடிகளும் முளைத்து தண்ணீர் செல்லும் பாதையை அடைத்த நிலையில் இருந்தது. இதனால் பாசன காலங்களில் தண்ணீர் கடைமடை வரை

சென்று சேர்வதற்கும், வெள்ள காலங்களில் தண்ணீர் வடிவதற்கும் மிகவும் கடினமாக இருந்தது. எனவே, 14 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் பீமனோடை வடிகாலில் செடிகளை அகற்றி தூர்வாரப்பட்டுள்ளது. இதன்மூலம் வடபாதி கொக்கேரி, சிக்கப்பட்டு, கருப்பமுதலியார்கோட்டை, சேனாப்பேட்டை, கீழப்பட்டு ஆகிய கிராமங்கள் பயன்பெறும்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு, மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ. இராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு. க. அன்பழகன், திரு. எஸ். கல்யாணசுந்தரம், நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in